**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**STC.NO-264/2024**

**Chief Examination of DW1**

| | | | |
|---|---|---|---|
| Name | ஜாபர் | Age: | 46 |
| Father's name | ஜக்கரியா | Calling: | ரியல் எஸ்டேட் புரோக்கர் |
| Village | கந்தர்வகோட்டை | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.11.2025

**முதல் விசாரணை**

1) நான் கந்தர்வக்கோட்டை பெரிய அரிசிக்காரத்தெருவில் வசித்து வருகிறேன். இவ்வழக்கின் புகார்தாரர் ராதா மற்றும் எதிரி முகமது மைதீன் ஆகியோரை எனக்கு தெரியும். நான் தற்போது பிக்பாஸ் டவுன் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் எனக்கு பக்கத்து ஊர்க்காரர் என்ற முறையில் அறிமுகம், ரொம்ப வருடங்களாக அவரை எனக்கு தெரியும். அவரது அம்மா பெயர் பரமேஷ்வரி. அண்ணன் பெயர் பரமசிவம். அவரது சகோதரிகள் அம்பிகாவதி, மணிமேகலை மற்றொரு சகோதரி பெயர் ஞாபகம் இல்லை. எதிரி வின்லேண்ட் என்ற பெயரில் நிறுவனம் வைத்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். இதற்கு முன்பாக நான், 2009 ஆம் ஆண்டில் இருந்து மேற்படி விண்லேண்ட் நிறுவனத்தில் வேலை செய்தேன். அப்போது என்னுடன் பகட்டுவான்பட்டி நமச்சிவாயம், நெப்புகை ஆறுமுகம், சரவணன், கந்தர்வக்கோட்டை யோகராஜ், தஞ்சாவூர் ஆரிப் ஆகியோர்கள் வேலை செய்தார்கள். நாங்கள் அனைவரும் இடம் வாங்கிக்கொடுக்கும் வேலை செய்து வந்தோம்.

2) நான் 2010 ஆம் ஆண்டு, ராதா என்பவரிடம் இருந்து, அவரது பெயரில் இருந்த 28 செண்ட், அவரது அம்மா பெயரில் இருந்த 41 செண்ட் விஸ்தீரணம் உள்ள இடங்களை வின்லேண்ட் நிறுவனத்தின் மைதீன் என்பவருக்கு வாங்கிக்கொடுத்தேன். ஒரு செண்ட்ன் விலை ரூ.33,500/- என்று விலை பேசி, 09.11.2010 ஆம் தேதியில் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. பத்திரப்பதிவு அலுவலகத்தில் வைத்து 28 செண்டிற்கான தொகையை ராதாவிடமும் 41 செண்ட் இடத்திற்கான தொகையை அவரது அம்மாவிடமும் மைதீனிடமிருந்து பெற்று கொடுத்தேன். அவ்வாறு பணம் கொடுக்கும் போது, ராதாவின் அக்கா கணவர் மதுரகவி, ராதாவின் கணவர் சசிக்குமார், அவரது அக்கா அம்பிகா ஆகியோர் அங்கிருந்தார்கள். மேற்படி கிரைய ஆவணங்களில் மேற்படி சசிக்குமார் மற்றும் அவரது அக்கா அம்பிகா சாட்சி கையொப்பம் செய்தார்கள். நாங்கள் எங்களில் ஒருவர் சாட்சி கையொப்பம் செய்யலாமா என்று கேட்டோம், அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அப்போது எங்கள் தரப்பில் மைதீன், நமச்சிவாயம், ஆறுமுகம், சரவணன், யோகராஜ் மற்றும்

ஆரிப் ஆகியோர்கள் அங்கிருந்தார்கள். ராதாவின் அண்ணன் பரமசிவத்திடமும் மைதீன் இடம் வாங்கினார். அந்த இடங்களை வாங்கிய பிறகு மைதீன், பிளாட் போட்டு விற்பனை செய்தார்.

3) அந்த பிளாட்களை நாங்களும் விற்றுள்ளோம், மற்றவர்களும் நேரடியாக வாங்கியுள்ளார்கள், ஒரு வருட காலத்தில் அனைத்து பிளாட்களும் விற்பனை செய்யப்பட்டுவிட்டது. 2010 ஆம் ஆண்டில் சமமா காம்ப்ளக்ஸ்-இல் வின்லேண்ட் ரியல் எஸ்டேட் நிறுவன அலுவலகம் இருந்தது. ராதா இடத்தை குறைவான விலைக்கு விற்பனை செய்துவிட்டதாக அடிக்கடி மேற்படி அலுவலகத்திற்கு வந்து, மைதீனிடம் கேட்பார். அருகில் உள்ளவர்கள் விற்ற இடத்திற்கு ஏன் பஞ்சாயத்து செய்கிறீர்கள் என்று கேட்டவுடன் அங்கிருந்து சென்று விடுவார். 2016 ஆம் ஆண்டு தஞ்சாவூர் பாஸ்கர புரத்தில், வின்லேண்ட் ரியல் எஸ்டேட் அலுவலகம் அமைக்கப்பட்டது. 07.01.2016 ஆம் தேதியில் 11 மணிக்கு ராதா, அவரது கணவர், சசிக்குமார், அம்பிகா, மதுரகவி மற்றும் ஐந்தாறு நபர்களை அழைத்து கொண்டு வந்து, ராதா மைதீனை தகாத வார்த்தைகளால் பேசினார். அப்போது கஸ்டமர்கள் இருந்ததால், தகாத வார்த்தைகளால் பேச வேண்டாம் என்று மைதீன் சொன்னார். மேலும் மைதீன் பயந்து கொண்டு, வெளியே வந்துவிட்டார், ராதா, அவரது கணவர், அவரது அக்கா மற்றும் அக்காவின் கணவர் ஆகியோர் அலுவலகத்தின் உள்ளே சென்று, அங்கிருந்த ஆவணங்களை எடுத்துவிட்டார்கள். மைதீன் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

4) காசோலை காணாமல் போய்விட்டதாக பிரச்சினை நடந்து கொண்டிருந்த போது, ராதா அவரது சகோதரிகள் மூலமாக மைதீன் மற்றும் இடம் வாங்கியவர்கள் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்தார். ராதா விற்பனை செய்த பிளாட்களை தகராறு செய்து, பாதையை அடைத்து விட்டார். மேற்படி மைதீன் தஞ்சாவூரில் கொடுத்த புகாரில் காவல் நிலையத்தில், சிவில் வழக்கு என்பதாலும் அறிவிப்பு வந்ததாலும் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**